# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஊழியர் சகாய நிதியம்
## (திருத்தம்)

***1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*தொழில் அமைச்சர் அவர்களால் 2021, செத்தெம்பர் மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2021, செத்தெம்பர் மாதம் 07 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **70 ஆம் சட்டமூலம்** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, எந்தச் சர்வதேச வேலையாளரொருவர் இலங்கையானது சமூக பாதுகாப்பு உடன்படிக்கையொன்றைக் கொண்டுள்ள அவரது சொந்த நாட்டிலுள்ள சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கு உதவுதொகை செலுத்துகின்றாரோ அந்தச் சர்வதேச வேலையாளருக்கு, அத்தகைய உடன்படிக்கையில் தரப்பட்டுள்ளவாறான காலப்பகுதிக்கு மேற்கூறப்பட்ட சட்டத்தின்கீழ் ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பதாகும்.

**ஊழியர் சகாய நிதியம்**
**(திருத்தம்)**

ச.வ.- ஓ. 35/2019

**1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

**2.** ஆயிரத்துத்தொள்ளாயிரத்து ஐம்பத்து எட்டாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 47 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) ''ஊழியர்'' என்னும் வரைவிலக்கணத்தில், ''உள்ளடக்கும்;'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, "உள்ளடக்கும் அத்துடன் தனிவேறான வேலையாளர் ஒருவருக்கு ஏற்புடையதற்பாலதான சமூக பாதுகாப்பு உடன்படிக்கையொன்றில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கான அத்தகைய தனிவேறான வேலையாளரை உள்ளடக்காது;'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) ''மேவப்பட்ட தொழில்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

" "தனிவேறான வேலையாள்" என்பது, இலங்கையில் மேவப்பட்ட தொழிலில் தற்காலிக வேலையொன்றில் உள்ளவரும் எந்த நாட்டில் அவர்

பிரசை ஒருவராகவுள்ளாரோ அந்த நாட்டில் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கு உதவுதொகையளிப்பவரும் சமூக பாதுகாப்பு உடன்படிக்கையொன்றின் நியதிகளின்படி அத்தகைய உடன்படிக்கையில் தரப்பட்ட வாறான காலப்பகுதிக்கும் அதன் நியதிகளின் படியும் இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் உதவுதொகையளிப்பதிலிருந்து விலக்களிக்கப் பட்டுள்ளவருமான சர்வதேச வேலையாளர் ஒருவர் எனப் பொருள்படும்;";

(3) ''தொழில்தருநர்'' என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப்பின்னர், பின்வரும் புதிய வரை விலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

" "சர்வதேச வேலையாளர்" என்பது, இலங்கை யைத் தவிர்ந்த நாடொன்றின் பிரசையொருவ ராகவுள்ள ஊழியர் ஒருவர் எனப் பொருள் படும்;";

(4) ''ஒழுங்குவிதி'' என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப்பின்னர், பின்வரும் புதிய வரை விலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

" "சமூக பாதுகாப்பு உடன்படிக்கை" என்பது, எந்த இருபுடை உடன்படிக்கைக்கு இலங்கை திறத்தவரொருவராகவுள்ளதோ மற்றும் தனிவேறான வேலையாளர்களாக தற்காலிக வேலையொன்றில், இன்னொரு நாட்டில் வேலை செய்கின்ற ஒரு நாட்டின் பிரசைகளுக்கு அத்தகைய வேறு நாட்டில் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கு உதவுதொகையளிப்ப திலிருந்து விலக்களிப்புகளை வழங்குகின்றதோ அந்த இருபுடை உடன்படிக்கையொன்று எனப் பொருள்படும்;".

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்